# தூய லூர்து அன்னை திருப்பீடம்

தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஓ.ஃபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 19 - 02 - 2017 இதழ் 13

## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

| | |
|---|---|
| திங்கள் முதல் வெள்ளி வரை | மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி |
| **சனி** | மாலை 6:00மணி மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி மற்றும் மாலை 6:30மணி |
| **ஞாயிறு (சிங்களம்)** | நண்பகல் 12:00மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்) காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு** ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பொது காலம் 7ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :**
லேவியர் : 19:1-2,17-18

**பதிலுரைப் பாடல் :**
திபா : 103:1-2.3-4.8,10.12-13

**பல்லவி :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.

**இரண்டாம் வாசகம்:**
1 கொரி 3:16-23

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா, அல்லேலூயா!
கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைவடைகிறது.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 5:38-48

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

**இரண்டாவது காணிக்கை**

**GIFT** திட்டத்திற்கான உறைகளைப் பெற்றுக்கொள்தல் இந்த வாரயிறுதியில், மாதத்தின் மூன்றாம் வாரயிறுதியாக இருப்பதால் கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும். GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடனும் கொடுத்தல்) திட்டமானது நமது உயர் மறைமாவட்டத்திலுள்ள குடும்பங்கள், இளையோர், மறைபரப்புப்பணி, கட்டடப்பணி போன்றவற்றுடன் தொடர்புள்ள பல்வேறு அமைப்புகள் திறம்படச் செயலாற்றத் தேவையான நிதியுதவியை நாம் தொடர்ந்து வழங்க ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ரொக்கமாகவோ காசோலையாகவோ கொடுக்க விரும்புவோர் உங்கள் பங்களிப்பை GIFT திட்ட உறைகளில் வைத்துப் பின்னர் காணிக்கைப் பைகளில் போடவும். GIFT திட்ட உறைகள் பின்னால் வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படுவோர் அங்கிருந்து, ஆலயப் பணியாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளவும்.

**குருத்தோலை**



தங்கள் இல்லங்களில் உள்ள குருத்தோலைகளை ஆலயத்தின் முகப்பில் வைக்கப்பட்டுள்ள கூடையில் போட அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**திருநீற்றுப்புதன் திருப்பலி நேரம்**

**நாள் : புதன், 01-03-2017**

மதியம் 12:30: ஆங்கிலத்தில்
மாலை 6:30 : ஆங்கிலத்தில்
மாலை 8:00 : தமிழில்



# நமது உதவி தந்தை
# அருட்திரு அந்தோணி மரிய ஜோசப் இடமாற்றம்

அன்பார்ந்த பங்கு மக்களே!

நமது உதவி தந்தை அருட்திரு அந்தோணி மரிய ஜோசப் இடமாற்றம் பெற்று புனித சூசையப்பர் ஆலயத்திற்கு (விக்டோரியா தெரு) 01-03-2017 முதல் செல்கிறார். அருட்தந்தை அவர்களுக்கு நம்முடைய நன்றியையும் செபத்தையும் தெரிவித்து கொள்வோம்.

**நமது பங்கில் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமையும் தமிழில் திருமணி ஆராதனை வழிபாடு நடைபெறும். வருகின்ற ஞாயிறு 05-03-2017 மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

**நம் குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும், தேவ அழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் செபிக்க, இறைவனின் திருப்பாதத்தில் அமர உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**



# சிந்தனை

பொதுக் காலத்தின் ஏழாம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டட்டத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமகன் இயேசுவின் அன்பர்களே! உங்களை அன்புடன் மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

இன்றைய வாசகங்கள் நம் மனதில் அன்பை விதைக்கின்றன. இறைமகன் இயேசுவின் விழுமியமாகிய அன்பு, நம் வாழ்வில் நிலைநாட்டி, அவரே நமக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவரின் முக்கியக் கட்டளையாகிய உன்னைப்போல் உன் அயலானை நேசி, அவர் உமது எதிரியாக இருந்தாலும் அன்புச் செய், அவருக்காய் இறைவனிடம் மன்றாடு என்பதே! அதற்கான நம் வாழ்நாள் முன்னோடித்தான் மக்களின் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால். தன்னைச் சுட்ட அலி அ.்.காவை மன்னித்துத்தன் நண்பனாக ஏற்றுக்கொண்டு அவரை சிறையில் சந்தித்து இறைமகன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினார். நாம் புனிதராய் இருப்பதுபோல நீங்களும் புனிதராய் இருங்கள் என்று இறைவன் அழைக்கின்றார். புனித வாழ்வு என்பது பிறரன்பைப் பொறுத்தே அமைகின்றது. தவறுக்குத் தவறு செய்யாமல், தீமைக்குத் தீமை செய்யாமல் பிறரை மன்னிக்கும் மேலான நிலைக்கு உயர்ந்து வர இயேசு நமக்கு அழைப்பு விடுக்கின்றார். இத்தகைய நல்ல இதயம் உள்ளவர்களாக மாறும் போதுதான் நாம் கடவுளைப் போலத் தூயவர்களாக, நிறைவுள்ளவர்களாக வாழ முடியும். இத்தகைய வாழ்வுக்கு இயேசு நம்மை அழைக்கின்றார். இயேசுவுக்கு நாம் தரும் பதில் தான் என்ன? சிந்திப்போம். இத்திருப்பலியில் இயேசுவின் அன்புடன் கலந்து விடைகாணச் செபிப்போம்.



**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |


**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை அந்தோணி மரிய ஜோசப் (antony.m.joseph@catholic.org.sg) - உதவித் தந்தை & Spiritual Director to the Archdiocesan Commission for the Apostolate of Tamil-Speaking (ACTS)

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore


அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.